



# Voice of Jagadguru

advaitam paramanandam — an e-magazine on advaita



## ஸத் ஸம்ப்ரதாயம் (உபாஸனா)

An Unit of the e magazine Voice of Jagadguru)

## ஸ்ரீ சிருங்கேரீ சாரதாபீடம் மஹாசந்நிதானம் ஸ்ரீஸ்ரீ பாரதீ தீர்த்த மஹாஸ்வாமிகள் அருளுரை

கடவுள் சாஸ்வதமானவர். நேற்றும், இன்றும், நாளையும் ஒன்றுபோல் மாற்றமில்லாமல் இருப்பவர். எல்லா இடங்களிலும் இருப்பவர். ईशानो भूथभव्यस्य स एबाद्य उ श्व: । ஈஶானோ பூ$^4$த$^2$ப$^4$வ்யஸ்ய ஸ ஏபா$^3$த்$^3$ய உ ம்வ:




ஒவ்வொரு மனிதனும் அவர் மேல் பக்தி வைத்து, கீதை போன்ற சாஸ்த்ரங்களில் அவர் காட்டிய வழியில் வாழ்வதுதான் நல்லது. அவரைப் பல உருவங்களில் பூஜிக்கலாம். எல்லா உருவங்களும் அவருடையதுதான், அவர் பக்தனின் பக்தி விசேஷத்தைப் பொறுத்து அருளுகிறார்.

'எல்லா இடங்களிலும் வ்யாபித்திருக்கின்ற கடவுளை கோயிலில் மட்டுமே எதற்காக பூஜிக்கவேண்டும்? அவர் கோயிலில் மட்டுத்தான் தோன்றுவாரா?" என்று சிலருக்கு ஸந்தேஹமுண்டாகலாம். கடவுள் எல்லா இடங்களிலும்

## ஸத் ஸம்ப்ரதாயம் (உபாஸனா)

An Unit of the e magazine Voice of Jagadguru)

நிறைந்திருந்தாலும் அவருடைய ப்ரபாவம், ஸான்னித்யம் ஆகியவை கோயிலிலுள்ள விக்ரஹத்திற்கு விசேஷமாக உள்ளது. கும்பாபிஷேகத்திற்குப் பிறகு பக்தனின் பக்தியை ஏற்றுக்கொள்ளும் சக்தி அத்த விக்ரஹத்திற்கு வந்துவிடுகிறது அதனால் அவர் மகிழ்ச்சியடைந்து பக்தனுக்கு அருள்பாலிக்கிறார். என்பதே இதற்கான பதில்,

இதைத்தான் ஶ்ரீஆதிசங்கரபகவத்பாதர் தமது பாஷ்யத்தில் सर्वगतोऽश्वरस्तत्रोपास्यमान: प्रसीदति । ஸர்வக3தோ(அ)ஶ்வரஸ்தத்ரோபாஸ்யமான: ப்ரஸீத3தி . सर्वगतस्यापि ब्रह्मण उपासनार्थ: प्रदेशविशेषपरिग्रहो न विरुध्यते । ஸர்வக3தஸ்யாபி ப்3ரஹ்மண உபாஸனார்த2: ப்ரதே3ஶவிஶேஷபரிக்3ரஹோ ந விருத்4யதே | என்று பல இடங்களில் விவரித்துள்ளார்.

ஆகையால் எல்லா இடங்களிலும் நிறைந்திருக்கும் கடவுளை கோயிலில் வழிபடுவதில் தவறேதுமில்லை. மேலும்,



अर्चादावर्चयेत्तावदीश्वरं मां स्वकर्मकृत् ।
यावन्नवेद स्वहृदि सर्वभूतेष्ववस्थितम् ॥
அர்சாதா3வர்சயேத்தாவதீ3ஶ்வரம்’ மாம்’ ஸ்வகர்மக்ரு’த் |
யாவன்னவேத3 ஸ்வஹ்ரு’தி3 ஸர்வபூ4தேஷ்வவஸ்தி2தம் ||

என்று பகவானே பாகவதத்தில் கூறியுள்ளார்.

அதாவது, எல்லா ப்ராணிகளிலும் இருக்கும் என்னை எதுவரை ஒருவன் தனது ஹ்ருதயத்தில் உணரவில்லையோ அதுவரை தனது கர்மாக்களை அனுஷ்டித்துக்கொண்டு ஈர்வரனான என்னை விக்ரஹம் போன்றவற்றில் அவகாசத்திற்கேற்றபடி பூஜிக்க வேண்டும் என்று பகவான் கூறியுள்ளார்.

இதை நன்றாகப் புரிந்துகொண்டு உருவமற்ற ஈச்வரனை உருவ வடிவத்தில் பூஜை செய்து அவரது அனுக்ரஹத்திற்கு பாத்திரர்களாகவேண்டும் என்று ஆசீர்வதிக்கிறோம்

நன்றி - அம்மன் தரிசனம்


Voice of Jagadguru
advaitam paramanandam
an e-magazine on advaita


ஸத் ஸம்ப்ரதாயம் (உபாஸனா)
An Unit of the e magazine Voice of Jagadguru)

# ஷண்மதம் - ஆறு பிரிவுகள்

(புதுக்கோட்டை பூஜ்யஸ்ரீ ப்ரணவாநந்த மஹாஸ்வாமிகள்)

காணாபத்யம்



**15.** ந்ருத்த கணபதி
பாஸாங்குஸாபூப குடாரதந்த சஞ்சத்கரா க்ல்ருப்த வராங்குலீயகம்
பீதப்ரபம் கல்பதரோரதஸ்தம் பஜாமி ந்ருத்தோப பதம் கணேஸம்

பாசம், அங்குசம், அப்பம், கோடரி, தந்தம் தாங்கிய கரங்கள்: மோதிரம் போல் வளைந்த துதிக்கை, பொன்னிறத் திருமேனி ஆகியவற்றுடன் கூடி, கற்பக மரத்தடியில் நடமிடத் தூக்கிய திருப்பாதத்துடன் அருளும் நிருத்த கணபதியைத் துதிக்கிறேன்.

**16.** ஹரித்ரா கணபதி
ஹரித்ராபம் சதுர்பாஹும் ஹரித்ரா வதநம் ப்ரபும்
பாஸாங்குஸ தரம் தேவம் மோதகம் தந்தமேவச
பக்தாபய ப்ரதாதாரம் வந்தே விக்ந விநாஸநம்



பாஸாங்குஸௌ மோதகமேகதந்தம்
கரைர் ததாநம் கநகாஸநஸ்தம்
ஹாரித்ரகண்ட ப்ரதிமம் த்ரிநேத்ரம்
பீதாம்ஸூகம் ஹரித்ரா கணேஸமீடே

மஞ்சள் நிறத் திருமுகத்துடன் ஐச்வர்யங்களுக்கு அதிபதியாக விளங்குபவரும், பாசம், அங்குசம், மோதகம், தந்தம் தாங்கிய மஞ்சள் ஒளி வீசும் நாற்கரங்களை உடையவரும், பக்தருக்கு அடைக்கலம் ஈந்து தடைகளை அகற்றுபவருமான - ஹரித்ரா கணபதியைத் துதிக்கிறேன்.

பாசம், அங்குசம், மோதகம், தந்தம் ஆகியவற்றைக் கரங்களில் தரித்தவரும், பொன்மயமான ஆசனத்தை உடையவரும் மஞ்சள் நிறத் திருமேனியை உடைய


ஸத் ஸம்ப்ரதாயம் (உபாஸனா)
An Unit of the e magazine Voice of Jagadguru)

முக்கண்ணரும் பொன்னிறத்தினாலான பீதாம்பரத்தை தரித்தவரும் ஆனஹறித்ரா கணபதியை வணங்குகிறேன்.



**17.** தருண கணபதி
பாஸாங்குஸாபூப கபித்த ஜம்பூ
பலம்திலாந் வேணுமபி ஸ்வஹஸ்தை:
த்ருத: ஸதாயஸ் தருணாSருணாப:
பாயாத் ஸயுஷ்மாந் தருணோ கணேஸ:


பாசம், அங்குசம், அப்பம், விளாம்பழம், நாவல் பழம், எள்ளுருண்டை, கரும்புத் துண்டு, முறித்ததந்தம் ஆகியவற்றைத் தாங்கிய எட்டுத் திருக்கரங்களும், இளங்கதிரவன் போன்ற செந்நிற மேனியும் கொண்ட தருண கணபதியைத் துதிக்கிறேன்.



**18.** வீர கணபதி
வேதாள ஸக்தி ஸரகார்முக சக்ர கட்க
கட்வாங்க முத்கர கதாங்குஸ நாகபாஸாந்
ஸூலஞ்ச குந்த பரஸூத்வஜ முத்வஹந்தம்
வீரம் கணேஸ மருணம் ஸததம் ஸ்மராமி

வேதாளம், வேல், வில், அம்பு, சக்ரம், வாள்,
கேடயம், சம்மட்டி, கதை, அங்குசம், நாகம், பாசம், சூலம், குந்தாலி, மழு, கொடி ஆகியவற்றைத் தாங்கிய பதினாறு திருக்கரங்களுடன்`அருளுபவரும், செந்நிறத்திருமேனியை உடையவருமான வீர கணபதியை எந்நாளும் தொழுகிறேன்.


(தொடரும்…)



Voice of Jagadguru

advaitam paramanandam

an e-magazine on advaita




## ஸத் ஸம்ப்ரதாயம் (உபாஸனா)

An Unit of the e magazine Voice of Jagadguru)

# தசமஹா வித்யா

(புதுக்கோட்டை பூஜ்யஸ்ரீ ப்ரணவாநந்த மஹாஸ்வாமிகள்)

காளீ தாரா வித்யா ஷோடசீ புவனேச்வரீ
பைரவீச் சின்னமஸ்தா ச
வித்யா தூமாவதீ ததா
மாதங்கீ ஸித்தவித்யா ச
கமலா பகளாமுகி
ஏதா தச மஹாவித்யா
ஸர்வ தந்த்ரேஷு கோபிதா
ச்யாமா ரகஸ்யம்



பிரம்மாவின் 10 புத்திரர்களுள் ஒருவன் தட்சன். அவன் ப்ரஜாபதி ஆவான். தட்சனின் மகள் சதி தேவி (தாட்சாயணி). அவளது கணவன் சிவன். தட்சன் மிகப்பெரிய யாகம் ஒன்றை நடத்த ஏற்பாடு செய்து, விண்ணுலகிலுள்ள தேவர்கள் அனைவரையும் கலந்து சிறப்பிக்கும் படி அழைப்பு விடுத்தான். 27 நட்சத்திரங்களின் பெயர்களைக் கொண்ட தனது 27 புதல்வியரையும், அவர்களது கணவன் சந்திரனுக்கும் அழைப்பு விடுத்தான். சதி தேவியையும், மருமகன் சிவனையும் அழைக்கவில்லை. தந்தையால் அழைக்கப்படாவிட்டாலும், தந்தை நடத்தப் போகவிருக்கும் மிகப்பெரிய யாகத்தைக் காண வேண்டும் என்ற ஆவலிலும், சகோதரிகளைக் காண விரும்பியும், முக்கியமாகத் தனது கணவருக்குச் சேர வேண்டிய அவிர்பாகத்தைப் பெற்றுக் கொள்வதற்கும், தேவர்கள் தங்களது மனைவியருடன் அலங்கரிக்கப்பட்ட வானவூர்தியில், பறந்து செல்வதையும் கண்டு பரவசமடைந்து, கணவன் சிவனிடம் அனுமதி கேட்டு நின்றாள்.

அழையாத விருந்தாளியாகச் சென்று தனது அன்பு மனைவி, அவமானப்படக்கூடாது என்று எண்ணியதால் சிவன் அனுமதி அளிக்கவில்லை. ஒரு சாதாரண கணவனைப் போல் ஆணாதிக்கத்துடன் அனுமதி தர மறுத்த சிவனின் மீதும், ப்ரஜாபதியாக மட்டும் நடந்து கொண்டு, தந்தை என்ற முறையில்

## ஸத் ஸம்ப்ரதாயம் (உபாஸனா)

An Unit of the e magazine Voice of Jagadguru)

அழைப்பு விடுக்காத தட்சன் மீதும் மிகுந்த கோபம் கொண்டு சதி தேவி, தனது சக்தியைக் (ஆதிக்கத்தையும், கோபத்தையும்) காட்ட விரும்பினாள். கண்ணுக்குத் தீட்டும் மை போன்றும், இருட்டினைப் போன்றும் கரிய நிறமுடைய காளியாகத் தோற்றமெடுத்து பயங்கரமான பற்களைக் காட்டி, இடிமுழக்கம் போல் பயங்கரமான சப்தத்துடன் சிரிக்கவும் ஆரம்பித்தாள். தனது மூன்று கண்களையும் ஒருமுறை திறந்து பார்த்த சிவன் பயத்தில் உறைந்தார்.



இரத்தம் சொட்டும் தொங்கிய நாக்கினையும், நிலைகுத்தி நிற்கும் முடியினையும், நான்கு கைகளையும், கோபமான கண்களையும், வியர்வையில் நனைந்த உடம்பினையும் கொண்ட அம்பிகையைக் கண்டு மிகவும் பயந்தார். மண்டை ஓடுகளைக் கழுத்தில் மாலையாகக் கொண்டு, தலையில் பிரகாசமான கிரீடத்தையும், 10 கோடி சூரியனைப் போன்ற பிரகாசத்துடன் கூடிய பிறைநிலாவை நெற்றியில் சூடியிருந்ததையும் கண்டு இங்குமங்கும் ஓடினார்.

தேவியோ இடி போல் தொடர்ந்து பயங்கரமாக ஆர்ப்பரித்து சிரிக்கவே, சிவன் எல்லாத் திசைகளிலும் ஓடினார். திரும்பிய 10 திசைகளிலும், தேவியின் 10 விதமான மாறுபட்ட பயங்கரமான தோற்றத்தைக் கண்டார். இந்தப் பத்து தேவியர் தோற்றமே தச மஹா வித்யா தேவியர் தோற்றமாகும்.

சிவனுக்கு நேர் எதிரில் தேவி எடுத்த முதல் தோற்றமே காளி ஆகும். சிவனுக்கு நேர் எதிரில் காளியும், அவருக்கு மேல் தாராவும், வலது பக்கம் சின்னமஸ்தாவும், இடது பக்கம் புவனேஸ்வரியும், பின்பக்கம் எதிரிகளை அழிப்பதில் வல்லவளான பலளாமுகியும், கீழே பைரவியும், தென்கிழக்கே முதியவளுமான தோற்றத்தில் தூமாவதியும், தென்மேற்கே அழகிய திரிபுரசுந்தரியும், வடமேற்கில் மாதங்கியும், வடகிழக்கில் கமலாத்மிகாவும் தோற்றம் கொண்டு நின்றனர். (தொடரும்...)

Voice of Jagadguru
advaitam paramanandam
an e-magazine on advaita

ஸத் ஸம்ப்ரதாயம் (உபாஸனா)
An Unit of the e magazine Voice of Jagadguru)

# நவராத்திரி

(புதுக்கோட்டை பூஜ்யஶ்ரீ ப்ரணவாநந்த மஹாஸ்வாமிகள்)



பல அற்புத ப்ரயோகங்களை தன்னகத்தே கொண்ட நூலாக வாராஹி மாலை திகழ்கிறது. திருவானைக்காவல் அகிலாண்டேஸ்வரி வாராஹிதேவியின் அம்சமாக அருள்பவள் என்பது உபாசனா ரகஸ்யம். சக்தி தல பீடங்களில் இத்தலம் வாராஹி பீடம், ஞானபீடம் மற்றும் தண்டினீ பீடம் என்று அழைக்கப்படுகிறது. ராகு தசை, ராகு புக்தி நடப்பவர்கள் வாராஹியை வழிபட நலங்கள் பெருகும்.

மஹிஷத்தின் மீது வரும்போது மஹிஷாரூடா வாராஹி என்றும், சிம்மத்தின் மீது வரும் போது சிம்ஹாரூடா வாராஹி என்றும் புலியின் மீது வரும் போது வ்யாக்ராரூடா வாராஹி என்றும் இத்தேவி வணங்கப்படுகிறாள். இவளது ஒவ்வொரு திருக்கோலமும் ஒவ்வொரு பலனைத் தருவதாகும்.
வாராஹிதேவி கருணை உள்ளம் கொண்டவள். தன்னை வணங்கும் பக்தர்களிடம் ஒரு தாயின் நேசத்தையும் பாசத்தையும் பொழிபவள். இத்தேவியை வழிபட்டு நெருங்கினால் அவள் அருள் அனவரதமும் நம்முடனே இருந்து காக்கும். நேர்மையான முறையில் இத்தேவியை வணங்க இவ்வுலகில் கிட்டாதது எதுவும் இல்லை. இறுதியில் மோட்சமும் சித்திக்கும் என்கிறது வாராஹி கல்பம்.


பஞ்சமி எனும் வாராஹியின் பெயர் விசேஷமானது. படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அனுக்ரஹித்தல் எனும் ஐந்தொழில்களில் ஐந்தாவது தொழிலைப் புரியும் சதாசிவர் ஆத்மவித்யையை அருளும் ஆச்சார்ய வடிவம். அவரின் அனுக்ரஹ வடிவமே வாராஹி தத்துவம்

வாராஹியை வணங்க சிலர் பயம் கொள்கிறார்கள். இத்தேவி கருணை உள்ளம் கொண்டவள். தன்னை வணங்கும் பக்தர்களிடம் ஒரு தாயின் நேசத்தையும் பாசத்தையும் பொழிபவள். இத்தேவியை வழிபட்டு நெருங்கினால் அவள் அருள் அனவரதமும் நம்முடனே இருந்து காக்கும். நேர்மையான முறையில் இத்தேவியை வணங்க இவ்வுலகில் கிட்டாதது எதுவும் இல்லை. இறுதியில் மோட்சமும் சித்திக்கும் என்கிறது வாராஹி கல்பம். (தொடரும்…)

ஸத் ஸம்ப்ரதாயம் (உபாஸனா)
An Unit of the e magazine Voice of Jagadguru)

## தேவி வழிபாடு

(புதுக்கோட்டை பூஜ்யஸ்ரீ ப்ரணவாநந்த ஹாஸ்வாமிகள்)




**11.** நீலபதாகா

நீல நிற வடிவான இந்த நித்யா தேவி, ஐந்து திருமுகங்களும் ஒவ்வொரு முகத்திலும் முக்கண்களும் கொண்டவள். இவள் பத்து திருக்கரங்களிலும் பாசம், அங்குசம், வஜ்ராயுதம், கொடி, வாள், கேடயம், அம்பு, வில் ஏந்தி அபய, வரதம் தரித்தவள். சிகப்புப் பட்டாடை அணிந்து, முத்தாபரணங்களாலும் ஆங்காங்கே ரத்னங்கள் இழைத்த அணிகலன்களாலும் அலங்கரித்துக் கொண்டு தாமரை மலர் மீது அமர்ந்துள்ளாள். இவளின் சாயலைப் போன்றே பல்வேறு சக்திகள் அவளைச் சூழ்ந்துள்ளனர். நல்லோர்களைக் காத்து, தீயோர்களை அழிக்கும் பேரரசி இவள். பரமனின் வாழ்க்கைத் துணையாக விளங்கும் இவள் திருவருட் பார்வையினால் ஒரு நொடிப்போதில் மேன்மை கைகூடும்.

மந்திரம்:
ஓம் நீலபதாகாயை வித்மஹே மஹா நித்யாயை தீமஹி
தன்னோ தேவி ப்ரசோதயாத்.

வழிபட வேண்டிய திதிகள்:
சுக்ல பட்ச ஏகாதசி, கிருஷ்ண பட்ச பஞ்சமி.

வழிபடு பலன்கள்:
எடுத்த காரியங்களில் வெற்றி, தேர்வுகளில் முதன்மை.

**12.** விஜயா

இந்த அன்னை அதிகாலை சூரியனைப் போல ஜொலிப்பவள். ஐந்து முகங்கள், பட்டாடை அணிந்து கண்களைக் கவரும் ஒளி பொருந்திய மகுடமும் நெற்றியில் பிறை நிலவு சூடியும் தோற்றமளிப்பவள். பலவகையான அணிகலன்களும் அழகுக்கு அழகு செய்கின்றன. திருக்கரங்களில் சங்கு, சக்ரம், பாசம், அங்குசம், வாள், கேடயம், வில், அம்பு, மாதுளம்கனி, அல்லி மலரை ஏந்தி வலது காலை மடித்து இடதுகாலைத் தொங்கவிட்டு, பாதத்தைத் தாமரை மலரில் இருத்திய தோற்றத்துடன் பொலிகிறாள். சுகாசனத்தில் அமர்ந்துள்ள இந்த அம்பிகையை போரில் வெற்றி பெற தியானம் செய்வது வழக்கம். புலியின் மீது அமர்ந்துள்ள எண்ணற்ற சக்திகள் இவளைச் சுற்றிலும் எப்போதும் இருப்பர். ஆணவம் கொண்டவர்களை அடக்கும் ஆதிசக்தியின் அம்சமாக இத்தாய் விளங்குகிறாள்.

மந்திரம்:
ஓம் விஜயா தேவ்யை வித்மஹே மஹா நித்யாயை தீமஹி
தன்னோ தேவி ப்ரசோதயாத்.

வழிபட வேண்டிய திதிகள்:
சுக்ல பட்ச துவாதசி, கிருஷ்ண பட்ச சதுர்த்தி.

வழிபடு பலன்கள்:
எந்தவகை வழக்குகளிலும் வெற்றி. கலைகளில் தேர்ச்சி.

**13.** ஸர்வமங்களா
இந்த தேவி பொன்னிற மேனியில் நவரத்னங்களும் இழைக்கப்பட்ட வைடூர்ய மகுடம் துலங்கப் பொலிகிறாள். இந்த நித்யா தேவியின் கடைக்கண் பார்வை அனவரதமும், அன்பரைக் காக்கின்றது. தன் நான்கு கரங்களிலும் மாதுளம்பழம், தங்கப் பாத்திரம் ஏந்தி அபய, வரத முத்திரை தரித்துள்ளாள். சிவப்புப் பட்டு உடுத்தி ஸர்வாலங்கார பூஷிதையாய் தோற்றம் அளிக்கிறாள். இந்த நித்யா தேவியைச் சுற்றிலும் எழுபத்திரண்டு சக்திகள் காவலாய் உள்ளதாக புராணங்கள் பகர்கின்றன.

மந்திரம்:
ஓம் ஸர்வமங்களாயை வித்மஹே சந்த்ராத்மிகாயை திமஹி
தன்னோ நித்யா ப்ரசோதயாத்.

வழிபட வேண்டிய திதிகள்:
சுக்ல பட்ச திரயோதசி, கிருஷ்ண பட்ச த்ரிதியை.

வழிபடு பலன்கள்:
பயணங்களில் விபத்து ஏதுமின்றி பாதுகாப்பு கிட்டும். அனைத்துவித மங்களங்களும் வந்து சேரும். (தொடரும்…)

ஸத் ஸம்ப்ரதாயம் (உபாஸனா)

An Unit of the e magazine Voice of Jagadguru)

## ஜகத்குரு ஸ்ரீ ஸச்சிதாநந்த சிவாபிநவ நரஸிம்ஹ பாரதீ மஹாஸ்வாமிகளின் திவ்ய சரித்திரம்

### 2. ஸந்யாஸம்


மஹாராஜா அக்ஷயவருஷம் ஆஷாடசுத்த பஞ்சமீ மத்தியானம் 4 மணி ஸமயத்தில் அரண்மனையிலிருந்து தக்க மனுஷ்யர்களை அனுப்பி பல்லக்கில் ஏற்றி சிவஸ்வாமி சாஸ்திரிகளை தன் அந்தப்புரத்திற்கு வரவழைத்துக் கொண்டார். பிறகு அந்தப்புரத்திலுள்ள ஜனங்களிடம் "இந்த சாஸ்திரிகள் நாளைய தினம் நமக்கு குருவாகிறார்" என்று சொல்லி எல்லோராலும் நமஸ்காரம் செய்து வைத்து ராஜ மரியாதைகளுடன் கிருஹத்திற்கு அனுப்பிக் கொடுத்தார். மறுநாள் காலை 6 மணிக்கே அரண்மனையிலிருந்து மேனாப்பல்லக்கு, சத்ரம், சாமரம் முதலான மரியாதைகளை அனுப்பி லக்ஷ்மீநரஸிம்ஹ சாஸ்திரிகளுடைய கிருஹத்திலிருந்து சிவஸ்வாமி சாஸ்திரிகளை ஸ்ரீமத் ஆசார்யாரிடம் அழைத்துச் சென்றார்கள். ஸ்ரீமத் ஆசார்யாரின் அனுக்ஞை பெற்று லக்ஷ்மீரமண தேவாலயத்தில் எல்லா பூர்வாங்கங்களும் நடந்து, அங்கிருந்து கால்நடையாக 'மைஸூர் காளஞ்சி ஏரி' என்ற தடாகத்திற்குப் போனவுடன் ஸ்ரீமத் ஆசார்யாரும் அங்கே விஜயம் செய்தார்கள். அங்கே ஜலமத்தியில் விதிவத்தாக ப்ரைஷோச்சாரணமான பிறகு ஆசிரமத்திற்கு யோக்யமான கடிஸூத்ர கௌபீன வஸ்திராதிகளைப் பெற்று மறுபடியும் லக்ஷ்மீரமண தேவாலயத்திற்கு வந்து அங்கு கிரமப்படி ஸ்ரீமத் ஆசார்யாரிடமிருந்து மஹாவாக்யோபதேசம் அடைந்தார்கள்.



ஸ்ரீமகாஸ்வாமிகளும் அவர்கள் குருஸ்வாமிகளும்.

யோகப்பட்டம் கொடுக்கும் ஸமயம் தன் குருவான அபிநவ ஸச்சிதானந்த பாரதீ ஸ்வாமிகளுடைய பெயரிருக்க வேண்டுமென்று ஸ்ரீமத் ஆசார்யாரும், தன் குருவான ஸ்ரீமத் ஆசார்யார் நரஸிம்ஹ பாரதீ ஸ்வாமிகளுடைய பெயரிருக்கவேண்டுமென்று மஹாராஜாவும், ஜனனத்திற்கு முன்னாலேயே ஸங்கல்பித்த சிவநாமம் ஸம்பந்தப்பட்டிருக்க வேண்டுமென்று அங்குள்ள பண்டிதர்களும் அபிப்பிராயப்பட்டார்கள். பிறகு ஸர்வஸம்மதமாக "ஸச்சிதானந்த சிவ அபிநவ நரஸிம்ஹ பாரதீ" என்பதாக யோகப் பட்டம் கொடுக்கப்பட்டது.


(தொடரும்...)



# Voice of Jagadguru

advaitam paramanandam

an e-magazine on advaita



## ஸத் ஸம்ப்ரதாயம் (உபாஸனா)

An Unit of the e magazine Voice of Jagadguru)

# श्रीमन्नारायणीयम्

## ஶ்ரீமந்நாராயணீயம்

### २. श्रीभगवद्रूपवर्णनम्

### 2. ஶ்ரீப4க3வத்3ரூபவர்ணனம்

यत्रैलोक्यमहीयसोऽपि महितं सम्मोहनं मोहनात्
कान्तं कान्तिनिधानतोऽपि मधुरं माधुर्यधुर्यादपि ।
सौन्दर्योत्तरतोऽपि सुन्दरतरं त्वद्रूपमाश्चर्यतोऽ-
प्याश्चर्यं भुवने न कस्य कुतुकं पुष्णाति विष्णो विभो ॥ ३ ॥

अव्ययाय नमः

யத்ரைலோக்யமஹீயஸோ(அ)பி மஹிதம்' ஸம்மோஹனம்' மோஹனாத்
காந்தம்' காந்திநிதா4னதோ(அ)பி மது4ரம்' மாது4ர்யது4ர்யாத3பி |
ஸௌந்த3ர்யோத்தரதோ(அ)பி ஸுந்த3ரதரம்' த்வத்3ரூபமாஸ்சர்யதோ(அ)-
ப்யாஸ்சர்யம்' பு4வனே ந கஸ்ய குதுகம்' புஷ்ணாதி விஷ்ணோ விபோ4 ||3||

அவ்யயாய நம:

எங்கும் நிறைந்த பிரபுவே ! மூவுலகிலும் மகிமை மிக்கதைக் காட்டிலும் மகிமை மிக்கதும் மனதைக் கவர்வதைக் காட்டிலும் மேலான கவர்ச்சி படைத்ததும் ஒளிக் குவையைக் காட்டிலும் ஒளி மிக்கதும், இனிமையிலும் அழகிலும் ஒப்புயர்வற்றதும் ஆச்சரியத் திலும் ஆச்சரியமானதும் ஆகிய உமது வடிவழகு உலகில் யாருக்குத் தான் அதில் ஆசையை வளர்க்காது? என்னை காத்தருளும் குருவாயூரப்பா .

அவ்யயாய நம: = அழிவும் மாறுபாடுமற்றவர், நீங்காதவர்.

तत्तादृङ्मधुरात्मकं तव वपुः सम्प्राप्य सम्पन्मयी
सा देवी परमोत्सुका चिरतरं नास्ते स्वभक्तेष्वपि ।
तेनास्या बत कष्टमच्युत विभो त्वद्रूपमानोज्ञक-
प्रेमस्थैर्यमयादचापलबलाच्चापल्यवार्तोदभूत् ॥ ४ ॥

पुरुषाय नमः

தத்தாத்3ரு'ங்மது4ராத்மகம்' தவ வபு: ஸம்ப்ராப்ய ஸம்பன்மயீ
ஸா தே3வீ பரமோத்ஸுகா சிரதரம்' நாஸ்தே ஸ்வப4க்தேஷ்வபி |
தேனாஸ்யா ப3த கஷ்டமச்யுத விபோ4 த்வத்3ரூபமானோஜ்ஞக-
ப்ரேமஸ்தை2ர்யமயாத3சாபலப3லாச்சாபல்யவார்தோத3பூ4த் || 4 ||

புருஷாய நம:

அப்படி இனிமையே உருக்கொண்ட உமது திருமேனியில் இடம் பெற்ற செல்வ நாயகியான லக்ஷ்மீதேவி அதில் மயங்கி வேறிடத்தில், தன்னுடைய பக்தர்களிடத்திலும் கூட நீடித்திருப்பதில்லை. அச்யுதா ! விபுவே ! உம்முடைய

## ஸத் ஸம்ப்ரதாயம் (உபாஸனா)

An Unit of the e magazine Voice of Jagadguru)

வடிவழகில் அங்ஙனம் நிலைத்து விட்ட பிரேமையால், சாபல்ய மின்மையால், உலகில் சபலச்சித்தம் படைத்தவள் என்ற வார்த்தை தோன்றியிருக்கிறது. இது உண்மையா ?

புருஷாய நமः = புரத்தில் இருப்பவர். எதற்கும் முன்னிருந்தவர். நிறைவுறக் கொடுப்பவர்.

लक्ष्मीस्तावकरामणीयकहृतैवेयं परेष्वस्थिरे-
त्यस्मिन्नन्यदपि प्रमाणमधुना वक्ष्यामि लक्ष्मीपते ।
ये त्वद्ध्यानगुणानुकीर्तनरसासक्ता हि भक्ता जना-
स्तेष्वेषा वसति स्थिरैव दयितप्रस्तावदत्तादरा ॥ ५ ॥

साक्षिणे नमः

லக்ஷ்மீஸ்தாவகராமணீயகஹ்ருதைவேயம் பரேஷ்வஸ்தி$^{2}$ரே-
த்யஸ்மின்னன்யத$^{3}$பி ப்ரமாணமது$^{4}$னா வக்ஷ்யாமி லக்ஷ்மீபதே |
யே த்வத்$^{3}$த்$^{4}$யானகு$^{3}$ணானுகீர்தனரஸாஸக்தா ஹி ப$^{4}$க்தா ஜனா-
ஸ்தேஷ்வேஷா வஸதி ஸ்தி$^{2}$ரைவ த$^{3}$யிதப்ரஸ்தாவத$^{3}$த்தாத$^{3}$ரா || 5 ||

ஸாக்ஷிணே நமः



. லக்ஷ்மீபதியே ! இந்த லக்ஷ்மீதேவி உம்முடைய பெருமையால் கவரப்பட்டவளாதலால் தான் மற்றவர்களிடம் ஸ்திரமாயிருப்பதில்லை என்பதற்கு இன்னொரு அடையாளமும் இப்பொழுது கூறுகிறேன். எந்த பக்த ஜனங்கள் உம்மை தியானிப்பதிலும் உம்முடைய குணங்களைப் பாடுவதிலும் உள்ள இன்பத்தில் திளைக்கிறார்களோ அவர்களிடத்தில் இவள் தன்னுடைய பர்த்தாவைப் பற்றிய பேச்சில் திளைத்து ஸ்திரமாக வசிக்க வில்லையா? (மற்றவர்களிடத்தில் தான் ஸ்திரமா யிருப்பதில்லை.) விந்தையிலும் விந்தை அவளின் செயல்.

ஸாக்ஷிணே நமः = எல்லாவற்றையும் நேரிடையாக உணர்பவர்.

(தொடரும் ….)

ஜகத்குரு சங்கராசார்யர் ஸ்ரீ ஸ்ரீ ஸ்ரீ மஹாஸந்நிதானம் ஸ்ரீ ஸ்ரீ ஸ்ரீ பாரதீ தீர்த்த மஹாஸ்வாமிகள்,
ஜகத்குரு சங்கராசார்யர் ஸ்ரீ ஸ்ரீ ஸ்ரீ ஸந்நிதானம் ஸ்ரீ ஸ்ரீ ஸ்ரீ விதுசேகர பாரதீ மஹாஸ்வாமிகள்
அவர்களின் பொற்பாதங்களில் சமர்ப்பிக்கிறோம்